தமிழ்நாடு அரசு
நகர் ஊரமைப்புத் துறை
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழும அலுவலகம்
கோயம்புத்தூர்

மனைஉட்பிரிவு ம.வ./(கோ.உ.திகு)/எண் . 37/ 2022 கோப்பு எண். 8283/ 2021 /உதிகு திட்ட அனுமதி எண் : 44/2022

மனைஉட்பிரிவு நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (SPLAY) அமைக்கப்பட வேண்டும்.
3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.
4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR-2019-ல் குறிப்பிட்டுள்ள Residential use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.
5. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின் கம்பிப் பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால் / கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைஉட்பரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.
6. மனைஉட்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
7. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல்தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.
8. மனுதாரர் மனைஉட்பிரிவிற்கு தொடர்புடைய ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைஉட்பரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் நகர் ஊரமைப்புத்துறை உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.
9. அ. மேற்படி மனைஉட்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் திட்ட அனுமதி / இசைவு (Planning Permission / Concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைஉட்பிரிவிற்கு இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. மேற்படி மனைஉட்பிரிவிற்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது, அங்கீகார நிராவாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறிவட்ங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10 மனுதாரர், நகர் ஊரமைப்புத்துறையிடமிருந்து மனைஉட்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 60cmx120cm அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும் / நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி உள்ளாட்சி அலுவலர் வழங்கிய சான்றினை ஏற்று நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலணைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission / Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவுப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.

13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு, நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட மனைஉட்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

	பரப்பளவு	விழுக்காடு
1. மனைஉட்பிரிவின் மொத்த பரப்பு	1.00 ஏக்கர் (அ) 4046.86 ச.மீ	
2. ஒதுக்கிய உட்பிரிவு மனைகள் எண்ணிக்கை	07	
3. உத்தேச முலை முடக்கு பரப்பு	10.125 ச.மீ	
பூங்கா ஒதுக்கீடு 405.00 ச.மீ பரப்பிற்கு ஈடான வழிகாட்டி மதிப்பு தொகை ரூ.43,85,000/- னை மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.		

23/2/2022

உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர்
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழு
கோயம்புத்தூர்

2/3/2022

305

கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திரு.மு.பிரதாப், இ.ஆ.ப.,
திருவள்ளுவர் ஆண்டு 2054/சோப கிருது/ஆவணி–29

ந.க.எண்.0978/2023/எம்.எச்.3 (வ) **நாள்.15 .09.2023.**

அனுமதி எண்.69/2023/எம்.எச்.3 (வ)

இணையதள விண்ணப்ப எண். 162/CP/23-24/0092169

பொருள்:- மனைஉட்ப்பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் – சௌரிபாளையம் கிராமம் – பழைய நில அளவை எண். 435/1, – வார்டு எண். AA(27) – பிளாக் எண். 22 –T.S.NO. 1 – ல் 1.00 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி வழங்கியது – மனைஉட்ப்பிரிவு அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:-

1. உறுப்பினர் செயலர் / இணைஇயக்குநர், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் திட்ட அனுமதி ந.க.எண். 8283/2021/ உதிகு, திட்ட அனுமதி எண். 44/2022 நாள்.21.02.2022.

2. ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள். 08. 09. 2023.

உத்தரவு:-

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், சௌரிபாளையம் கிராமம், பழைய நில அளவை எண். 435/1, – வார்டு எண். AA(27) – பிளாக் எண். 22 –T.S.NO. 1 – ல் 1.00 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைஉட்ப்பிரிவிற்கு பார்வை 1 ல் காணும் உறுப்பினர் செயலர் / இணைஇயக்குநர், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் திட்ட அனுமதி எண். 44/2022 மற்றும் தொழில்நுட்ப அனுமதி ம.வ/கோ.உ.தி.கு.எண்.37/2022–ன் அனுமதி படியும், பார்வை 2 –ல் காணும் ஆணையாளர் அவர்களின் உத்தரவின் படியும் மனைஉட்ப்பிரிவு அனுமதி அளிக்கப்படுகிறது.

இணைப்பு:- மனைஉட்ப்பிரிவு வரைபடம்.

ஆணையாளருக்காக,
கோயம்புத்தூர்மாநகராட்சி.

15/09/2023

பெறுநர்:-

M/S. Vijayalakshmi Marketing,Mr.N.Rajan Babu,
No.90, V.K.Road.,
Peelamedu,
Coimbatore-641004.
E-mail:rajanbabu@vijayalakshmi.co.in